ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# ஸ்ரீ ஸ்ரீநிவாசமகாதேசிகன் (ஆக்கூர் ஆண்டவன்) வாழித்திருநாமம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# ஸ்ரீ ஸ்ரீநிவாசமகாதேசிகன் (ஆக்கூர் ஆண்டவன்) வாழித்திருநாமம்

நம: ஶ்ருத்யந்தஸௌமித்ரியோகி3நே கருணாப்3த4யே ।
பாதூ3ஸேவகராமாநுஜாத்தஸார்வஜ்ஞ்யஶாலிநே ॥

வேதா3ந்தலக்ஷ்மணமுநே: க்ரு'பாபாத்ரம் கு3ணாகரம் ।
ஸ்ரீ ஸ்ரீநிவாஸயோகீ3ந்த்3ரமஹாதே3ஶிகமாஶ்ரயே ॥

ஸ்ரீரங்க ஸ்ரீநிவாசசீர் முனியும் செந்தமிழும்
பாரெங்கும் போற்றிசைப்பப் பல்லாண்டாய் - ஏரங்க
நான்மறையும் வாழ்க நளினமகள் நாயகன் சீர்
சொன்மறை வாணர் சுகித்து

கன்னி உத்திரட்டாதி காசினி வந்தோன் வாழியே
கனமுறு பத்தர் தம் மனவிருள் காய்ந்தோன் வாழியே
முன்னை மறைமுடி ராமானுசன் புரை முனிவரன் வாழியே
பன்னிய மறைநயம் பல படப்பகர்ந்த எம் பரமன் வாழியே
துன்னிய வாசான் பெருமைச் சதகம் சொன்னவன் வாழியே
துங்கபகவன் சொற்பொருள் விரித்தருள் தூயவன் வாழியே
பொன்னியரங்கம் பொற்புற உரைந்த புண்ணியன் வாழியே
புனிதச்சீனிவாச மாமுனி பொற்றாள் வாழியே

வேதயுகம் வாழ வேதியர்கள் தாம் வாழ
வேதாந்த தேசிகனார் மேதினியில் - நாதமுறு

நன்னூலுரை சீனிவாசனெனு மா முனியே
இன்னும் ஒரு நூற்றாண்டிரும்

## திருநாள் பாட்டு

பாதுகைக்காமாயிரத்தின் பின் பகுதி விளங்கிடுநாள்
பாரிடையே சௌலப்யம் பரந்தோங்கி வளர்ந்திடுநாள்
வாதுக் கைக்கொள்வார் திருத்தி வழி காட்டி வாழ்ந்திடுநாள்
வழிவந்தோர் யாவர்க்கும் அருள்மாரிப் பொழிந்திடுநாள்
தீதகற்றும் பாதுகையே எனத் திடமாய் எடுத்துரைநாள்
செப்பு காலக்சேபத்தில் சிறிதேனும் சலித்தலில்நாள்
பூதலத்தில் சீனிவாச முனிவரானார் வந்தருள்நாள்
புரட்டாசி உத்திரட்டாதிக்குரிய திருநாளே

ஸ்ரீ ஸ்ரீநிவாசமகாதேசிகன் வாழித்திருநாமம் முற்றிற்று